விமானத்தில் தமிழில் அறிவிப்பு செய்த கேப்டன் ப்ரிய விக்னேஷ் | ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற்ற விஷ்ணு சங்கர் | மனைவி — அடியார் கவிதை

ரூ.20/- | ஆகஸ்ட் 2020 ஆவணி | தீபம்: 8 ஒளி: 8




24 மனை

குலமுரசு

தமிழ் மாத இதழ்

ஆத்மபலம் அருளும் ஆவணி




SRI VEERA'S GROUP
SRI VEERA'S CREATIONS
பல ஜவுளி கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்
ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
SRI VEERA'S CREATIONS
(Silks, Textiles & Readymade collections)
மொத்த விலை ஷோரூம்
Wholesale showroom
2 Wheeler & Car Parking வசதியுடன்
எண். 51-52/1, M.C. ரோடு, சென்னை - 600 021.
போன் : 2590 1771, 2590 1772, 2590 1773, 2590 1774

24 மனை குலமுரசு

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2013/48200

தீபம்: 8 ஒளி: 8

ஆகஸ்ட் 2020 ஆவணி

24 மனை தெலுங்கு செட்டியார்கள் இனமக்களுக்காக
24 மனை தெலுங்கு செட்டியார்கள் சேரிட்டபிள் டிரஸ்ட்
அறக்கட்டளையால் நடத்தப்படும் அரசியல் சார்பற்ற சமூக மாத இதழ்
24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்கம்
கீழ்ப்பாக்கம், சென்னை - 600010.

சிறப்பாசிரியர்:
கரூர் கே.சி.பழனிசாமி
Ex.MP., Ex.MLA.,

ஆசிரியர்:
Dr. துரை அங்குசாமி
M.A.,B.L.S.,B.Ed.,Ph.D.,

40 லட்சம் மக்களின் நாடித்துடிப்பு
24 மனை குலமுரசு மாத இதழ்

ஆண்டுச் சந்தா ரூ. 200/-

ஆண்டு சந்தா செலுத்தும் முறை

Account Name	: 24 MANAI KULAMURASU
Bank Name	: CANARA BANK
Branch	: CHENNAI KILPAK
Account Number	: SB. A/c. 1650101014869
IFSC CODE	: CNRB0001650

மேற்கண்ட வங்கிக் கணக்கில் ஆன்லைன் மூலம் ரூ.200/- செலுத்தி அதன் பரிவர்த்தனை விபர ஸ்கிரீன்ஷாட்-ஐ 9965 900 990 என்ற வாட்ஸ்அப் (அ) kulamurasuoffice@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் முகவரி மற்றும் செல்போன் எண் குறிப்பிட்டு அனுப்பவும். கனரா வங்கியில் செலான் மூலம் பணமாக செலுத்துவோர் சந்தா ரூ.200 + வங்கி சேவைக் கட்டணம்+GSTவரி ரூ.60 சேர்த்து ரூ.260/-ஐ கனரா வங்கிக் கணக்கில் செலுத்தி, கௌண்டர் ஃபைல் ரசீது நகலுடன் உங்கள் முகவரி எழுதி மின்னஞ்சல் (அ) வாட்ஸ்அப் (அ) தபாலில் அனுப்பவும்.

24 மனை குலமுரசு,
330/1, சின்னாண்டான் கோவில் வீதி,
கரூர் - 639001.
Customer Care Cell: 9965 900 990
Ph: 04324-240663 - K.C.S.R.சிவக்குமார்
E-Mail: kulamurasuoffice@gmail.com

ஆசிரியர் குரல்

வாசக உறவுகளுக்கு வணக்கங்கள் பல,

நான்கு மாதங்களாக மின்னிதழாக (E-Magazine)
வான்வழியே - வாட்ஸ்அப் மூலம்
வலம் வந்த குலமுரசு இதழ்
அச்சாக்கம் செய்யப்பட்ட பொன்னிதழாக
ஆவணி மாதத்தில் வெளியிடுவதில்
ஆனந்தமும் பெருமிதமும் அடைகிறோம்.

விமானப் பயணத்தில் புதிய சகாப்தமாய்
தேமதுரத் தமிழில் அறிவிப்பு செய்து
சாதனைப் புதுமை புரிந்துள்ள
கேப்டன் ப்ரியவிக்னேஷ்
மற்றும்
ஐஏஎஸ் தேர்வில் வெற்றிக்கனி பறித்து
ஆகாயச் சாதனை படைத்துள்ள
ஆற்றலாளர் விஷ்ணு சங்கர்
இந்த இருவரும்
இணையற்ற சாதனைகளால்
இனத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.
இளம் இச்சாதனையாளர்களை வெளிச்சப்படுத்தி
இவர்களுக்கு எழுத்து மகுடம் சூட்டும் கட்டுரைகள்
இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

இன்றைய சூழலை எதிர்கொள்ளும் வகையில்
கொரோனா விழிப்புணர்ச்சிக் கட்டுரைகளும்,
ராகு - கேது பெயர்ச்சிப் பலன்கள் குறித்தான
ஜோதிடச் செய்திகளையும் இவ்விதழில்
இணைத்துள்ளோம்.



வாசகர்களின் பேராதரவையும்
விமர்சனங்களையும்
வணங்கி வரவேற்கிறோம்!.

துரை அங்குசாமி
ஆசிரியர்

Gujan's PARIPALANA RETIREMENT COMMUNITY

GUJAN'S

PARIPALANA - PHASE II

Retirement Community

Sri Veeramathi Amman INFRA DEVELOPER PVT. LTD.

Comfortable Homes for Retired living Near Vadavalli.

First Phase of 92 Units already functioning smoothly Since July 2017.
Second Phase of 1, 2, 3 BHK Flats under Construction near
Bharathiya Vidhya Bhavan School , Ajanoor Road, Vadavalli, Coimbatore.



* *Bring back the Memories of Time gone by...*

Common Vegetarian Dining, Cultural & Religious Activities including Regular Music Concerts , Comprehensive Medical Care, Indoor Game Activities, Mini Gym for Seniors, Guest Rooms & Library.

*** SERVICE PROVIDER- PARIPALANA CAFE**

For Booking Call :
87540 44116
87540 44881
81100 42393

No : 4, Gandhi Layout,
Maruthamalai Main Road,
Coimbatore - 46.

TN/11/BUILDING/0045/2019
Dated on 29.03.2019

svaconstructions@yahoo.co.in
srigujanbuilder@gmail.com

www.gujanparipalanaseniorliving.com

APPROVED RERA APPROVED

தமிழ் மாதங்களில் ஒவ்வொன்றுக்கும் தனி முக்கியத்துவம் உண்டு. சித்திரை தொடங்கி பங்குனி வரை வாரநாட்களில் ஒவ்வொரு நாளும் விரதம் இருப்பது சிறப்பு வாய்ந்தது.

ஆடி போய் ஆவணி வந்தால் நன்மை கூடி வரும் என்பதை போல் ஆவணி மாதம் மிக சிறந்த மாதமாக கருதப்படுகிறது. ஆடியில் சில நிகழ்ச்சிகள் செய்ய மாட்டார்கள். ஆவணி தொடங்கியதும், உடனே அந்த நிகழ்ச்சியினை வைத்துவிடுவார்கள்.

ஆத்மபலம் அருளும் ஆவணி



ஆவணி மாதத்தில் சூரியன் சிம்மவீட்டில் ஆட்சி செய்கிறார். சூரியனுக்கு சிம்மவீடு பலமான வீடு. நமக்கு ஆத்மபலத்தைத் தருபவர் சூரியனே. எனவே தான், ஆவணி மாதத்தில் விநாயகர் அவதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகியன நிகழ்ந்ததாகச் சொல்வர்.


ஆவணி மாத ஞாயிறு

ஆவணி மாதம் வரும் ஞாயிற்றுக்கிழமை விரதம் இருப்பது சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் 'ஞாயிறு' என்றாலே 'சூரியன்'. அது மட்டுமின்றி, ஆவணி மாதத்தில் ஒவ்வொரு ஞாயிறு காலை 6-7 மணி வரை சூரிய ஹோரையே இருக்கும். ஆவணியில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஆன்மிக அறிவைப் புகட்டினால், அவர்கள் அதில் சிறந்து விளங்குவர். தேகநலனுக்காக சூரியநமஸ்காரப் பயிற்சி எடுப்பவர்கள் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் தொடங்குவது மிகவும் விசேஷம்.



ஆவணி அவிட்டம்

ஆவணி அவிட்டம் அந்தணர்களுக்கான பண்டிகை. ஆவணி மாத அவிட்ட நட்சத்திரத்தன்று பூணூல் அணிபவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு பக்தி பூர்வமான பண்டிகை இது. இந்த நாளில் பழைய பூணூலை கழற்றிவிட்டு, புதிய பூணூல் அணிந்து கொள்வர். இதை குருமுகமாகத் தான் செய்ய வேண்டும்.



விநாயகர் சதுர்த்தி

விநாயகருக்கு உரிய விரதங்களுள் மிக விசேஷமானது விநாயகர் சதுர்த்தி. விநாயரை போற்றி வரும் ஆவணி சதுர்த்தியான விநாயகர் சதுர்த்தியில் விரதமிருந்து வழிபட அனைத்து நன்மையும் கிடைக்கும்.

திருவோணம்

மகாவிஷ்ணு என்ற நெடிய உயர்ந்த தெய்வம், வாமனன் என்ற குட்டையான வடிவு கொண்டு பூமியை தன் காலடியால் அளக்க அவதரித்தது இந்த ஆவணி மாத திருவோண நட்சத்திரத்தில்தான்.

மதுரை மீனாட்சி- சுந்தரேஸ்வரர் கோயிலில் ஆவணி மூலத் திருவிழா பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. கருங்குருவிக்கு உபதேசம் செய்தது, நாரைக்கு முக்தி கொடுத்தது, தருமிக்கு பொற்கிழி அளித்தது, புட்டுக்காக மண் சுமந்தது, நரிகளைப் பரிகளாக்கியது, வளையல் விற்ற லீலை... என, மதுரை மண்ணில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்கள் இந்த விழாவில் இடம்பெறும். விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக, சொக்கநாதருக்குப் பட்டாபிஷேகம் செய்யப்படும்.

காஞ்சி காமாட்சி ஆவணி மூல தீர்த்தத்தில் நீராடுவது மிகவும் புனிதமானது. மோட்ச கதியை தரவல்லது.

இளையான்குடி மாறனார், குலச்சிறையார், திருநீலகண்டர், அதிபத்தர் ஆகிய நாயன்மார்கள் அவதரித்த மாதம் இந்த ஆவணி.

ஆவணி மாத வளர்பிறை

ஆவணி மாதத்தில் கிரஹப்பிரவேசம் செய்தால் அந்த வீட்டில் நீண்ட நாட்கள் தங்கலாம். திருமணம் செய்தால் வாழ்க்கைத் துணை சிறப்பாக அமையும்.

விவசாயத்திலும் ஆவணி மாதம் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. ஆடிப் பட்டம் தேடி விதைக்கும் விவசாயிகள், ஆவணி மாதத்தில் சற்றே ஓய்வு எடுத்துக் கொள்வதுடன், ஒட்டுமொத்த வேளாண் மக்களும் தங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயங்களை, விழாக்களை நடத்தி மகிழ்வர்.

ஜோதிட முறைப்படி பார்த்தால் சூரியன் வலுப்பெறுவதால் அந்த காலத்தில் (ஆவணி) செய்யப்படும் அனைத்து செயல்களும் சிறப்பான பலனைத் தருவதால், ஆவணிக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது என்று கூறலாம்.

சிறப்பம்சம் நிறைந்த ஆவணி மாத வளர்பிறையில் கடவுளை மனமுருகி பூஜித்து அனைத்து நலங்களையும் பெறுவோமாக.



எம்பிரான் இளையான்குடி மாற நாயனார்
ஆவணி - மகம் (660 - 840)



நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்டு, முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆகியோர் இன்று 07-08-2020 நேரில் சந்தித்து, நிவாரணப் பொருட்களை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சாந்தி ராமு (குன்னூர்), திரு.ஒ.கே. சின்னராஜ் (மேட்டுப்பாளையம்), நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு. கப்பச்சி டி.வினோத் உட்பட அரசுத் துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.

இணையத்தில் குலமுரசு

புதிய முயற்சிக்கு வாசகர்களின் வரவேற்பு

All Time 15776 | Last Month 4032

Last 3 months

India	9.64K
United States	221
Unknown Region	80
United Arab Emirates	29
United Kingdom	11
Japan	10
Canada	6
Kuwait	4
France	3
Other	1.24K

கொரோனா ஊரடங்கு காரணமாக கடந்த 4 மாதங்களாக நம் 24 மனை குலமுரசு இதழ் மின்இதழ் வடிவில் வெளியிடப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஏப்ரல் மாத முதல் மின்இதழை குலமுரசு இணையதளம் வழியாக 1832 பேர் படித்திருந்தனர். மே இதழை 4732 பேரும், ஜூன் இதழை 4032 பேரும் படித்துள்ளனர். கடந்த 4 மாதங்களில் உலகமெங்குமிருந்து 15776 பேர் இணையதளம் வழியாக வாசித்துள்ளனர். இது தவிர வாட்ஸ்அப், ஃபேஸ்புக்கில் பகிரப்பட்ட PDF வடிவ மின்இதழை படித்தவர் எண்ணிக்கையை அறிந்து கொள்ள இயலவில்லை.

எண்ணற்போல் வாழ்க்கை



ஒரு திருடன் அரண்மனைக்குள் திருடுவதற்காகப் போனான். அவன் குதித்த இடம் மன்னனின் படுக்கையறை. மன்னர் அரசியிடம், "நல்ல சாதுக்கள் பலர் ஆற்றங்கரை பக்கம் வந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவருக்கு நமது மகளைத் திருமணம் செய்து கொடுக்கலாம்" என்று சொன்னார்.

திருடன் கேட்டான். 'என்னவொரு அதிர்ஷ்டம்!' என்று மகிழ்ந்து, மறுநாள் சாது வேஷம் போட்டுக் கொண்டு ஆற்றங்கரை சாது சமூகத்தில் ஒருவனாகப் போய் உட்கார்ந்து கொண்டான்.

மந்திரி முதலானோர் வந்து ஒவ்வொரு சாதுவிடமும் மன்னர் மகளை மணம் செய்ய வேண்டினர். ஆனால் எல்லோரும் மறுத்து விட்டார்கள். திருட்டுச்சாது மட்டும் மௌனமாக இருந்தான்.


"எல்லோரும் மறுக்க, ஒரு வாலிபச்சாது மட்டும் மௌனமாக இருந்தார். ஒருவேளை அவரை நீங்களே நேரில் சென்று வற்புறுத்தினால் அவர் இணங்கலாம்" என மந்திரிப்பிரதானிகள் அரசரிடம் சொல்ல, அவரே நேரில் வந்து கபட சாதுவிடம் மனம் கனிய வேண்டினார்.


அரசரே நேரில் வந்து பணிந்து, உள்ளமுருக வேண்டியதைக் கண்டதும் திருட்டுச் சாதுவின் மனப்போக்கு மாறி விட்டது. தனது ஜடாமுடியையும், தாடியையும், தண்டு கமண்டலங்களையும், காவி உடுப்பையும் ஒரு முறை பார்த்தார். 'எவ்வளவு பொருத்தமான வேஷம்! இந்த வேஷம் மன்னருக்கே நம்பிக்கையை அளித்ததென்றால், என்னைப் பணிந்து உள்ளமுருகிக் கேட்க வைத்ததென்றால், இது எத்தகைய புனிதமான வேஷம்! நம்பிக்கை தரும் வேஷம்! ஆகா, இந்த வேஷத்திற்கே இப்படிப்பட்ட அரசகுமாரி கிடைத்தால், உண்மையிலேயே நான் சாதுவாகி விட்டால், இந்த அரசகுமாரியை விடவும் உயர்ந்தவையெல்லாம் என்னை வந்து சேருமல்லவா! இனி இந்தக் கணம் முதல் நான் உண்மையான சாதுவாகவே வாழ்வேன்" எனத் தீர்மானித்தான். அப்படியே செய்து பெரிய மகான் எனவும் பெயரெடுத்தான்.

போலி வேடம் போட்டாலும், வேடத்திற்குரிய எண்ணங்கள் வரும். இதில் ஒரு பெரிய உண்மை அடங்கியுள்ளது. உருவம் எண்ணத்தை மாற்றும். எண்ணம் வாழ்வை மாற்றும்.

தொகுப்பு:
திருமதி. தமிழ்ச்செல்வி சதாசிவம் M.A.,B.Ed.,M.Phil.,
ஆசிரியை, ஈரோடு

இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய மனவியல் வல்லுனர் என அமெரிக்காவை சேர்ந்த வில்லியம் ஜேம்ஸ் என்பவர் அழைக்கப்பட்டார். நம்முடைய உணர்ச்சிகள் பற்றி அவர் ஒரு கொள்கையை 1884ம் ஆண்டில் வெளியிட்டார். அவரது கொள்கையை பல மனவியல் வல்லுனர்கள் மறுத்தார்கள். ஆனால் டேனிஷ் அறிவியலறிஞர் கார்ல் லாங்க் என்பவர் அக்கொள்கையை ஆதரித்தார். எனவே இக்கொள்கை





William James & Carl Georg Lange



ஜேம்ஸ்-லாங்க் கொள்கை எனப் பெயர் பெற்றது.

தைரியம் இல்லாதவன் தைரியம் இருப்பதுபோல் நடிக்கும் போது, நடிப்பு தொடர்ந்தால் தைரியம் வந்து விடலாம். உடல் நலமற்றவன் மனம் தளராது உடல்நலமுள்ளவன் போல் பல செயல்களைச் செய்யும் போது உடல்நலமெய்தி விடலாம்.

துயரமுள்ளவன் சிரித்து மகிழும் போது துயரம் ஓடிப்போகலாம். இதை நமது முன்னோர்கள் பாவனா யோகம் என்றார்கள். யத்பாவம் தத்பவதி, எப்படி பாவனை செய்கிறாயோ அப்படி ஆகிறாய் என்றார்கள்.

வில்லியம் ஜேம்ஸ் - லேங்க் கொள்கை 1884-90ல் வெளியிடப் பெற்றது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் இக்கொள்கையை வெளியிட்டு விட்டார்.

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.(621)

சிரி, சிரித்தால் துயரங்கள் மறைந்து போகும் என்றார். துயர உணர்வால், உடல் சோர்ந்து, முகம் வாடி, தலைகவிழ்ந்த ஒருவன் வெளிப்படையாகச் சிரித்தால், முகம் மலரும். என்டார்ஃபின் என்ற சுரப்புகள் உடலினுள் தோன்றும். நலமாக்கும் ஹார்மோன் (ழநயடபே ழடிசஅடிநே) உடலினுள் சுரக்கும். உள்ளம் மகிழும் துயரம் மறையும்.

எனவேதான் இன்னோரிடத்தில்

நகல்வல்லார் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். (999) என்றார்.

சிரிக்கத் தெரியாதவனுக்குத் துயரமான மன உணர்வே இருக்கும். அவன் வீட்டிற்குள் இருளில்தான் முடங்கிக் கிடக்க வேண்டும். அவனுக்கு பகல் என்பதே இல்லை என்கிறார். வெளிபாவனை வேண்டும் என்கிறார்.

துயரம் ஓட ஆடி மகிழ வேண்டும்.
கோபம் ஒழிய அமைதி காக்க வேண்டும்.
நோய் தீரச் சிரித்து நோய் பற்றிய
எண்ணங்களை விரட்ட வேண்டும்.
பயம் போக தைரியமாக நடக்க வேண்டும்.

இதுதான் வில்லியம் ஜேம்ஸ்-லேங்க் வெளியிட்ட கொள்கை.

ஒரு சிறந்த நடிகர் "நான் கோபமாக நடித்தபின் பலமணி நேரம் என் உடம்பு நடுங்கிக் கொண்டிருக்கும். என் இதயப் படபடப்பு அதிகமாகவே இருக்கும். நான் அதிக சோர்வடைகிறேன்" என்கிறார்.

இன்னொரு சிறந்த நடிகை, "நான் அழுது கண்ணீர் சடித்து சோகரசம் மிளிர நடித்தால், அன்றைய நாளில் நான் வேறொன்றும் செய்ய முடியாது. சோகமாகவே நாள் முழுதும் இருப்பேன்" என்கிறார்.

எதிர்மறை உணர்வுகளுக்குப் பதிலாக உடன்பாட்டு உணர்வுகளைப் பொருத்தினால் நலம் பெருகும்.

தைரியம் இல்லாதவன் தைரியம் இருப்பதுபோல் நடிக்கும் போது நடிப்பு தொடர்ந்தால் தைரியம் வந்து விடலாம். உடல் நலமற்றவன் மனம்தளராது உடல்நலமுள்ளவன் போல் பல செயல்களைச் செய்யும் போது உடல்நலமெய்தி விடலாம்.

துயரமுள்ளவன் சிரித்து மகிழும் போது துயரம் ஓடிப்போகும். இதை நமது முன்னோர்கள் பாவனா யோகம் என்கிறார்கள். யத்பாவம் தத்பவதி, எப்படி பாவனை செய்கிறாயோ அப்படி ஆகிறாய் என்றார்கள்.

வில்லியம் ஜேம்ஸ் - லேங்க் கொள்கை 1884-90ல் வெளிப் பெற்றது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் இக்கொள்கை வெளியிட்டு விட்டார்.

தேன் வந்து பாயுது காதினிலே தமிழ் அறிவிப்பு விமானத்திலே



கேப்டன் ப்ரியவிக்னேஷ்

(8 வீடு)

விமானத்தில் தகவல்களைத் தெளிவான தமிழில் அறிவித்த ஒரு விமானி கடந்த சில நாட்களாக சமூக ஊடகங்களில் கொண்டாடப்பட்டு வருகிறார்.

அவர் விமானத்தில் தமிழில் அறிவிக்கும் காணொளியும் வைரலாக சென்றது.

சென்னையிலிருந்து மதுரை செல்லும் அந்த விமானத்தில் அவர் தமிழில் காவிரி, கொள்ளிடம், ரங்கநாதர் குறித்து தமிழில் அறிவிப்பு அளிக்கிறார்.

விமான நிலையங்களில் ஆங்கிலத்தையும், இந்தியையும் கேட்டுக்கொண்டிருந்த நம் காதுகளுக்கு திடீரென தமிழ் அறிவிப்பு வந்தால் எப்படி இருக்கும்? அதுபோல விமானம் பறந்து கொண்டிருக்கையில் சென்னையின் அழகை நிதானமாக அறிவித்த விமானி பிரியவிக்னேஷுக்கு ஒட்டுமொத்த தமிழர்களும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

"பயணிகளே, நாம் இப்போது காவிரி ஆற்றின் மேல் 16 ஆயிரம் அடி மேல் பறக்கிறோம். இன்னும் சில மணித்துளிகளில் உங்களுக்கு வலதுபுறம் ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயிலும், கொள்ளிடம் ஆறும் தெரியும்.." என்ற அறிவிப்பு உங்களை மலைக்கவைக்கிறதா? நான் காண்பது என்ன கனவா என்று உங்களயே நீங்கள் கிள்ளிப்பார்க்கிறீங்களா, அது கனவு இல்லை நிஜம் தான்.

தமிழக நகரங்களிடையே பறக்கும் விமானங்களில் இனி தமிழில் அறிவிப்பு மேற்கொள்ள மத்திய விமானத்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ள நிலையில், நாம் மேற்கண்ட அறிவிப்பை கேட்டுள்ளோம்.

சென்னையிலிருந்து புறப்படும் சர்வதேச விமானங்கள் பலவற்றில் தமிழில் அறிவிப்பு இருப்பதாகவும், இந்திய விமான நிறுவனங்கள் தமிழில் அறிவிப்பதில்லை எனவும் புகார் கூறப்பட்டு வந்தது. இது தொடர்பாக மத்திய அரசிடம் கோரிக்கை வைத்தும் நிறைவேற்றப்படாமல் இருந்தது. சென்னை வந்து செல்லும் அனைத்து விமானங்களிலும் தமிழில் அறிவிப்பு வெளியிட வேண்டும் என தமிழக அரசு சார்பில் மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், சென்னை வந்து செல்லும்


பயணிகள் விமானங்களில் தமிழில் அறிவிப்பு வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசுக்கு மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி கடிதம் எழுதியுள்ளார்.

அந்த அறிவிப்பு தற்போது முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

சரி யார் இந்த ப்ரிய விக்னேஷ்?

நம் 24 மனை இனத்தைச் சேர்ந்த 8 வீட்டுக்காரர் இவர். ஒரு புதிய சகாப்தத்தை வான்வெளியில் உருவாக்கிய இந்த இளம்சிங்கம் நம் 24 மனை இனத்தவர் என்பதில் இனமே பெருமை கொள்கிறது.

தேனி மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் பிறந்தது, வளர்ந்தது எல்லாம் சென்னையில்தான்.



"நான் வடசென்னைக்காரன். ராயபுரத்தில்தான் பிறந்து, வளர்ந்தேன். என் ஆன்மாவில் ராயபுரத்தின் உப்புக் காற்று கலந்திருக்கிறது," என்கிறார் ப்ரியவிக்னேஷ்.

"சிறு வயதிலிருந்தே விமானி ஆகவேண்டும் என கனவு இருந்தது. அதனுடன் வரலாற்றின் மீதும் பெரும் விருப்பம். விமானியாக பயிற்சி எடுத்து கொள்வதற்கு முன்பு, வரலாறு படித்தேன்," என்று கூறும் ப்ரியா விக்னேஷ், அதன் கனவை நினைவாக்க பல தடைகளை தாண்டி வந்திருக்கிறார்.

பாதையோர வியாபாரி அப்பா - தமிழாசிரியர் அம்மா.

"விமானியாகுவது எளிதான காரியம் இல்லைதானே? அதுவும் என்னைப் போல ஒரு எளிய வீட்டுப் பையனின் உயரப் பறக்கும் ஆசைக்கு எவ்வளவு தடைகள் இருக்கும்? அது அத்தனையும் எனக்கும் இருந்தது"

மேலும் அவரே, "என் அப்பா சாதாரண பாதையோர வியாபாரி. திருவனந்தபுரத்தில் கடை வைத்திருக்கிறார். என் அம்மா தமிழாசிரியர். அரசு உதவி பெறும் பள்ளியில் பணியாற்றுகிறார். இவர்களின் முழு அர்ப்பணிப்புதான் என்னை விமானியாக்கி இருக்கிறது," என்று கூறுகிறார் ப்ரியவிக்னேஷ்.

"விமானியாகப் பயிற்சி பெற பெரும் தொகை தேவைப்பட்டது. என் அம்மாவின் பி.எஃப் பணம் போதவில்லை. என் அப்பா அவரது பல்லாண்டு உழைப்பின் பலனாக வாங்கிய இடத்தை அடகு வைக்க முயன்றார். அது கைகூடவில்லை. எனது விருப்பத்தை அங்கீகரித்த அத்தை தனது சொந்த வீட்டை அடமானம் வைத்து பணம் தந்தார். இதுவும் எனது முதல் இரண்டு கட்ட பயிற்சிக்கு மட்டும்தான் போதுமானதாக இருந்தது." என்கிறார்.

"(புகழ்பெற்ற 'ரசவாதி' நாவலில்) எழுத்தாளர் பாலோ கொயலோ சொல்வார்தானே உனது விருப்பத்தைக் கைக்கொள்ள இந்த முழு பிரபஞ்சமும் சதி செய்யும் என. அப்படித்தான் என் வாழ்விலும் நடந்தது. ஆம், என் அப்பா கடை வைத்திருக்கும் திருவனந்தபுரத்தில், நாகர்கோயிலை சேர்ந்த முருகன் என்பவர் ஒரு உணவகம் நடத்துகிறார். எனது நிலையைக் கேள்விப்பட்ட அவர் 15 லட்சம் பணம் கொடுத்தார். இப்படித்தான் என் கனவு வடிவம் பெற்றது," என்கிறார் விக்னேஷ்.

வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் இளைஞர்களுக்கு, இவர் சரியான முன்னுதாரணம். ஏழ்மைக்கு நடுவே கனவு கண்டு - கனவை நனவாக்க திட்டமிட்டு இமாலய முயற்சியால் விமானியாகவேண்டுமென்ற இலக்கை எட்டியுள்ளார். தமிழ் அறிவிப்பை செய்ததன் மூலம் விமானப் போக்குவரத்துத் துறையில் தமிழினமே இவரைத் தலையில் வைத்துக் கொண்டாடுகிறது.


நம் 24 மனை இனமும் பெருமை கொள்கிறது. இனத்தின் அடையாளமான குலமுரசு இவருக்கு வாழ்த்துப் பூ தூவுகிறது. ■

பள்ளிபாளையத்தில் வாச்சுவ கோத்திர குலதெய்வ வழிபாடு

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமூகத்தின் பெரிய வீட்டுக்காரர் எனப்படும் வாச்சுவ கோத்திர பங்காளிகளின் குலதெய்வ வழிபாடு விழா கடந்த ஆடி மாதம் 18-ஆம் நாள் 2.8.2020 ஞாயிற்றுகிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது.

பள்ளிபாளையம் அம்மன் கோவில் வீதியில் உள்ள வாச்சுவ கோத்திர பங்காளிகளின் குலதெய்வமான ஸ்ரீபாப்பாயம்மாள், ஸ்ரீ புள்ளாப்பம்மாள், ஸ்ரீவீரபத்திர சுவாமிகளின் கோவில் உள்ளது நூறு ஆண்டுகளுக்கும் மேலாக குலதெய்வ வழிபாடு மிகச் சிறப்பாக நடத்தி வரும் இவர்கள் இந்தஆண்டு கொரோனா என்னும் கொடிய வைரசால் நாடே ஸ்தம்பித்து போய் உள்ளது. ஆனால் மனம் தளராத நமது சமூக வாச்சுவ கோத்திர பங்காளிகள் இந்தாண்டும் சமூக இடைவெளியை கடைபிடித்து மிக எளிமையான முறையில் கொண்டாடினர்.

அதன்படி கடந்த ஆடி மாதம் 17 ஆம் நாள் 1.08.2020 சனிக்கிழமை அன்று இரவு 10 மணிக்கு கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது தொடர்ந்து சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகளுடன் நடந்து பிரசாதமும் வழங்கப்பட்டது.





தொடர்ந்து 2.08.2020 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு காவிரி கரைக்கு சென்று அங்குள்ள நமது சமூகத்தின் ஸ்ரீ ஓம் காளியம்மன் கோவிலில் உள்ள கிணற்றில் தீர்த்தம் எடுத்து சக்தி அழைத்தல் நடந்தது அதன்பிறகு அதிகாலை 4 மணிக்கு ஸ்ரீ பாப்பாயம்மாள், ஸ்ரீ புள்ளாப்பம்மாள், ஸ்ரீ வீரபத்திர சாமிகளுக்கு சிறப்பு புத்தாடைகளை உடுத்தி அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடந்தன இதில் 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சுவாமியை தரிசித்தனர் வந்திருந்த அனைவருக்கும் பிரசாதம் மற்றும் பை பிரசாதம் வழங்கப்பட்டது.

சமூக இடைவெளியை பின்பற்றி வந்திருந்த அனைவருக்கும் சானிடைசர் கிருமி நாசினி மருந்து கைகளில் பூசி கொண்டு விழாவில் கலந்து கொண்டனர் விழாவில் பிரபல தொழிலதிபர் கருணா டெக்ஸ் சேர்மன் V.T.கருணாநிதி, பேப்பர் ஸ்டோர் மாதேஸ்வரன், சமூகத்தின் முன்னால் பெரியதனம் கலைப்புலி செல்வராஜ், மற்றொரு முன்னாள் பெரிய தனம் செந்தில்குமார், நூல் சுப்பிரமணியம், இளம்பிள்ளை சாமிநாதன், பிரகதீஸ்வரன், ஈரோடு பாபு, குமராபாளையம் மதி, மற்றும் வாச்சுவ கோத்திர பங்காளிகள், உறவின்முறையோர்கள், பொதுமக்கள் என அனைவரும் சமூக இடைவெளி பின்பற்றி இந்த விழா மிகச்சிறப்பாக எளிய முறையில் கொண்டாடப்பட்டது. .

– அ.சுரேஷ், குலமுரசு நிருபர், பள்ளிபாளையம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களை 18-08-2020 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் சந்தித்து, சுதந்திர தின விழா உரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உடுமலைப்பேட்டையில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவங்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.



30-03-2020 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை நேரில் சந்தித்து சொந்த ஊருக்குத் திரும்பமுடியாமல் வெளிமாநிலங்களில் தவித்துவரும் நம் இனமக்களை மீட்டுவந்து சேர்க்கக் கோரும், கோரிக்கை மனுவை அல்ட்ரா கோல்டு சிமெண்ட் ஆலை உரிமையாளரும் காவலிபாளையம் கெந்தவங்குருவர் குல முக்கியஸ்தருமான கரூர் திரு.S.விஜயபாஸ்கர் அவர்கள் அளித்தபோது எடுத்த படம்.


காவலிபாளையம் அருள்மிகு அங்காளம்மன் துணை
உறுதியான பாதுகாப்பு
அல்ட்ரா
கோல்டு
சிமெண்ட் (PPC)
S.விஜயபாஸ்கர்
நிர்வாக இயக்குநர்
IS : 1489
PART - 1
CM/L : 4665981
PORTLAND POZZOLANA CEMENT
FLY ASH BASED
ULTRA
GOLD
ULTRA GOLD
MAX. RETAIL PRICE Rs.400
(INCLUSIVE OF ALL TAXES)
NET QUANTITY : 50Kg
WEEK
MONTH
YEAR
Manufactured by :
BASKAR CEMENTS & PRODUCTS
KARUR - 639 001, TAMILNADU, INDIA
BASKAR CEMENTS & PRODUCTS
நிர்வாக அலுவலகம்: 9/454-4, குமரன் நகர், வீனஸ் பள்ளி பின்புறம், சி.ஆ. கோவில் ரோடு, கரூர் – 639 001.
தொழிற்சாலைகள்: கரூர், சென்னை, தூத்துக்குடி.
போன் : 04324 - 240295 செல்: 98424 62995 / 97509 62991
இ-மெயில்: baskarcements@gmail.com வெப்சைட்: www.baskarcements.com

தந்தையின் ஐஏஎஸ் கனவை நனவாக்கிய K.விஷ்ணுசங்கர்

(16 வீடு - வம்மையர் குலம்)



சமீபத்தில் வெளியான 2019ம் ஆண்டுக்கான சிவில் சர்வீஸ் தேர்வில் 384வது இடம் பெற்று தேர்ச்சி பெற்றுள்ளார் K.விஷ்ணு சங்கர். இவர் G.T.கேசவன் அவர்களின் பேரனும், G.T.K. குமார் - சசிகலா தம்பதியரின் இளைய மகனுமாவார். நம் இனத்தில் 16 வீடு வம்மையர் குலத்தைச் சேர்ந்தவர்.

ஓசூர் நந்தவனம் பகுதியில் வசித்து வரும் G.T.K.குமார் - சசிகலா தம்பதியருக்கு, விக்னேஷ்குமார் (29), விஷ்ணுசங்கர் (27) ஆகிய மகன்கள் உள்ளனர். இவர்களது சொந்த ஊர் கிருஷ்ணகிரி மாவட்டம் வெங்கடத்தாம்பட்டியாகும். இரு மகன்களில் இளையமகன் விஷ்ணு சங்கர் சமீபத்தில் வெளியான 2019ம் ஆண்டுக்கான சிவில் சர்வீஸ் தேர்வில் ஐஏஎஸ் தேர்ச்சி பெற்று நம் இனத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவரது பெற்றோர் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஓசூரில் குடியேறினர். மூத்த மகன் விக்னேஷ்குமார் பெங்களூருவில் உள்ள ஐடி கம்பெனி ஒன்றில் பணியாற்றி வருகிறார். இளைய மகன் விஷ்ணுசங்கர் கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் (GCT) B.E., மெக்கானிக்கல் படித்துவிட்டு, பெங்களூருவில் வேலை செய்து வந்தார். ஐஏஎஸ் ஆகவேண்டும் என்ற தனது தந்தையின் இளமைக்காலக் கனவை அறிந்த விஷ்ணுசங்கர், அதை நிறைவேற்றும் வகையில் 2016ஆம் ஆண்டில் முதல் முதலாக ஐஏஎஸ் தேர்வு எழுதினார். முதல் முயற்சியில் தோல்வி அடைந்தார். இருப்பினும் மனம் தளராமல் தொடர்ந்து 2017, 2018ம் ஆண்டுகளில் தேர்வெழுதிய அவர், 4வது முயற்சியில் இந்திய அளவில் 384வது இடம் பெற்று ஐஏஎஸ் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இதுகுறித்து விஷ்ணுசங்கர் கூறியதாவது, "எனது தந்தை படிக்கும் காலத்தில் ஐஏஎஸ் ஆகவேண்டும் என்று விரும்பியுள்ளார். அவரால் அது முடியவில்லை. அதனால் என்னை ஐஏஎஸ் படிக்க ஊக்கப்படுத்தினார். நான் அவரது கனவை நிறைவேற்றியுள்ளேன். பட்டப்படிப்பு முடிந்ததும் 2 வருடங்கள் பெங்களூருவில் வேலை செய்தேன். பின்பு ஐஏஎஸ் ஆகும் கனவுடன் வேலையை விட்டுவிட்டு பெங்களூருவிலேயே தங்கி 2016ம் ஆண்டு முதல் பெங்களூரு நகரை தேர்வு மையமாகக் கொண்டு ஐஏஎஸ் தேர்வு எழுதத் தொடங்கினேன். தினமும் 12 முதல் 14 மணி நேரம் வரை படிப்பதை வழக்கமாக வைத்திருந்தேன். இதற்காக எந்த ஒரு பயிற்சி வகுப்புக்கும் செல்லவில்லை.

ஐஏஎஸ் தேர்வுக்கான புத்தகங்கள் மற்றும் ஆங்கில நாளிதழ்களை தினசரி வாசித்தேன். மேலும், ஐஏஎஸ் எழுதும் நண்பர்களுடன் குரூப் ஸ்டடியிலும் படித்து வந்தேன். மூன்று முறை வெற்றி வாய்ப்பை இழந்த போதும் சற்றும் சோர்ந்து விடாமல் கடுமையாக உழைத்தேன். 4வது முயற்சியில் வெற்றி கிடைத்தது. சமூக சேவைப்பணியில் எனக்கு சிறுவயது முதலே ஆர்வம் அதிகம்.

தமிழ்நாட்டில் பணி செய்வதையே விரும்புகிறேன். கர்நாடகாவில் தேர்வு எழுதியதால், எனது தேர்ச்சி விபரம் தமிழகத்தில் தெரியாமல் போனது" என்று அவர் கூறினார்.



மகாப் பெரியவரின் மகத்தான கருணை



கும்பகோணம் பக்கத்துல உள்ள ஒரு வேத பாடசாலைக்கு திடுதிப்புன்னு ஒரு நாள் காலங்கார்த்தால பார்த்துட்டு வரலாம்னு புறப்பட்டுட்டார் பெரியவா.

பொதுவாகவே வேக நடை நடக்கும் பெரியவா அன்று,வேதம் கத்துக்கற குழந்தைகளைப் பார்க்கப் போறோம்னு வேகம் கூடுதலாக இருந்தது.

அஞ்சு வயசுலேர்ந்து ஏழு வயசுக்கு உட்பட்ட பதினைஞ்சு இருபது குழந்தைகள் ஸ்ருதி சுத்தமா வேத பாடங்களைச் சொல்லிண்டு இருந்ததைப் பார்த்ததும், அப்படியே ஓசை எழுப்பாம நின்னு உன்னிப்பா கேட்டுண்டு இருந்தார். பெரியவா.

கொஞ்ச நேரம் கழித்து, குழந்தைகளுக்கு வேதம் கத்துத்தந்துண்டு இருந்த குரு யதேச்சையா திரும்பினப் போதுதான் பெரியவா வந்திருக்கிறதையே பார்த்தார்.

இந்த பாடசாலை உங்களோட பாதம் படறதுக்கு நாங்க குடுத்து வைச்சிருக்கோம்!ன்னு, வார்த்தைகளே வராம ரொம்ப பவ்யமா சொன்னார்.

அதே சமயம் எல்லாக் குழந்தைகளும் வேத மந்திரங்கள் சொல்லி பரமாசார்யாளுக்கு வந்தனம் பண்ணினர்.

ஆசார்யா ரொம்ப அமைதியா, "இது வேதத்தை பரிபாலனம் பண்ற இடம்.காலம் காலமா இருக்கிற வேதம் ஷீணமாயிடாம, நீங்கள்லாம் அதை சம்ரட்சணம் செஞ்சுண்டு இருக்கேள்.

வேத மந்த்ரங்கள் இந்தக் குழந்தைகளோட வாக்குலேர்ந்து வர்றதைக் கேட்கிறதே ஆனந்த அனுபவமா இருக்கு.

.நான் திடுதிப்புன்னு வந்து நிற்பேன்னு உங்களுக்கு தெரிஞ்சிருக்க நியாயமில்லை.

அதனால் என்னை மரியாதை பண்ணி வரவேற்கலை என வெல்லாம் நினைகாதீங்கோ. ஸ்ருதி ஸ்ம்ருதிகளை மதிக்கறது தான் முக்கியம்" என்று சொல்லி விட்டு யாருமே எதிர் பார்க்காத படிக்கு அந்த வேத பாடசாலையோட உக்ராண அறைக்கு (சமையல்கட்டு) போனார். அங்கே கனத்த சரீரத்தோட இருந்த பரிசாரகர் (சமையல்காரர்) ஒருத்தர், வேர்க்க விறுவிறுக்க, சேவை பிழிஞ்சுண்டு இருந்தார். (சேவை - இடியாப்பம்) அவரைப் பார்த்ததும்,"என்ன குழந்தைகளுக்காக சேவை பண்ணிண்டு இருக்கியா? அப்படின்னு கேட்டா பெரியவா.

ஏற்கெனவே சிரமப்பட்டு சேவை செஞ்சுண்டு இருந்த அவர், ஆசார்யாளைப் பார்த்ததும் கையும் ஓடலை, காலும் ஓடலைன்னு சொல்வாளே அந்த மாதிரி படபடப்போட நாக்கு தடுமாற, "ஆஆஆ-ஆமாம் பெரியவா-பாவம் குழந்தைகள் பெத்தவாளையெல்லாம் விட்டுப் பிரிஞ்சு வந்து இங்கேயே தங்கிப் படிக்கறதுகள். ஏதோ அதுகளுக்கு கொஞ்சம் நல்லதா பண்ணிக் குடுக்கலாமென்னுதான்! என்று சொன்னார்.

"நல்ல விஷயம்..அடிக்கடி சேவை பண்ணிவியோ?" கேட்டார், பெரியவா.

"முடிஞ்சப்ப எல்லாம் பண்ணிக்குடுப்பேன். சாப்டா எந்த ஹேதுவும் வராததா பார்த்துப் பண்ணினாதானே குழந்தைகள் வயத்துக்கு சிரமம் இருக்காது.

அவாளும் சங்கடம் இல்லாம வேதம் படிப்பா! அதனால நல்லாத்தான் செஞ்சு போடுவேன்!" சொன்னார், பரிசாரகர்.

"ரொம்ப சந்தோஷம்...! இனிமே குழந்தைகளுக்காக நீ தினமும் இதே மாதிரி சேவை பண்ணு! பெரிய புண்ணியம் கிடைக்கும்" மெல்லிசா ஒரு புன்னகையோட சொல்லிட்டு அங்கேருந்து வெளில வந்தார் மகாபெரியவா.

"என்னடா இது.சேவை (இடியாப்பம்) பண்றது ரொம்பவே சிரமமான வேலை ஆச்சே...ஏதோ வாரத்துல ரெண்டு நாள்னாகூட பரவாயில்லை.

சிரமத்தோட சிரமமா செய்யலாம்.ஆனா பெரியவா தினமும் பண்ணச் சொல்றாரே எப்படி முடியும்?னு மனசுக்குள்ளே நினைச்சு அதிர்ச்சியானார்.

அங்கேயிருந்து புறப்படத் தயாரான பெரியவா "அந்த பரிசாரகரை வந்துட்டுப் போகச் சொல்லுங்கோ"என்று சொன்னார்.

வந்து நின்னவரை ஏற இறங்கப் பார்த்த பெரியவா "என்ன தினமும் சேவை பண்ணுன்னு சொன்னதும் பயந்து போயிட்டே போல இருக்கு"ன்னு கேட்டார்.

இல்ல பெரியவா அதெல்லாம் ஒண்ணும் இல்லை.முடிஞ்ச வரைக்கும் குழந்தைகளுக்கு தினமும் சேவை பண்ணித் தரப்பார்க்கறேன். குரல்ல ஒரு ஸ்திரமே இல்லாம சொன்னார்.

லேசா சிரிச்சார் பெரியவா. "தினமும் சேவை பண்ணுன்னு நான் சொன்னதும் நீ முழிச்சதைப் பார்த்தப்பவே எனக்கு தெரிஞ்சுடுத்து,'என் வார்த்தையை நீ தப்பாப் புரிஞ்சுண்டுட்டே'ன்னு.. நான் சொன்னதுக்கு அர்த்தம் சேவை பலகாரத்தை தினமும் பண்ணணும்கறது இல்லை.. ஆகாரத்தால குழந்தைகளுக்கு எந்த ஹேதுவும் வந்துடக் கூடாதுன்னு பார்த்துப் பார்த்து நல்ல பலகாரமா செஞ்சு குடுக்கறதா சொன்னே இல்லையா..

அதுதான் பெரிய சேவை (தொண்டு)அந்தக் கைங்கரியத்தைதான் விட்டுடாம செய்யின்னு சொன்னேன். புரிஞ்சுதா?"

ஜய ஜய சங்கர!! ஹர ஹர சங்கர!!!

– கருணை மழை தொடரும்



பின்பக்கமாகவும் பறக்கக்கூடிய பறவை – ஹம்மிங் பறவை

துருவக் கரடிகள் எந்தக் கையை அதிகம் பயன்படுத்தும்? – இடது கை.

பற்கள் இல்லாத பாலூட்டி இனம் – எறும்புதின்னி

நட்சத்திர மீன்களுக்கு எத்தனை கண்கள்? – எட்டு

மூன்று இதயங்களைக் கொண்ட கடல்வாழ் உயிரினம் – ஆக்டோபஸ்

உலகில் மிகவும் விஷத்தன்மையுடைய மீன் – ஸ்டோன் ஃபிஷ் (ஆஸ்திரேலியா)

தலையில் இதயத்தைக் கொண்டுள்ள கடல்வாழ் உயிரினம் – இறால் மீன்



நம் மக்களுக்கு பணிவான வேண்டுகோள்

கொரோனா என்ற கொடிய வியாதி

கடந்த 5 மாதங்களாக நாமனைவரும் கொரோனா என்ற கொடிய வியாதியால் பல இன்னல்களை சந்தித்துவருகிறோம்;

* பலர் வேலையை இழந்துள்ளனர்; பலரது வருமானம் குறைந்துள்ளது
* பலர் இக்கொடிய தொற்றுநோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள்
* மிகவும் வேதனைக்குரிய விஷயம் - நாம் பல உறவினர்களையும் நண்பர்களையும் இழந்திருக்கிறோம்.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்று பார்த்தால் –



* நம்மிடமிருக்கும் மெத்தனத்தன்மை,
* அதிநம்பிக்கை,
* எதையும் மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்வது,
* யார் என்ன அறிவுரைகள் கூறினாலும் மதிக்காமல் செல்வது


என்று கூறிக்கொண்டே போகலாம்.

வைரஸ் பற்றி

* தெரியாத விஷயங்கள் பல உள்ளன.
* சரியான வைத்தியம் கிடையாது.
* தடுப்பூசி கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த நிலையில் மருத்துவர்களும், அரசாங்கமும் சொல்லும் பாதுகாப்பு முறைகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆனால், மக்களில் பெரும்பாலேருக்கு

டாக்டர் N.செல்வராஜன் MD.,
Head - Dept of Anaesthesiology
& Critical Care, KMCH, கோயம்புத்தூர்.
(8 வீடு - மக்கடையர்)





இதனைக் கடைப்பிடிப்பதில் கொஞ்சம்கூட அக்கரையில்லை.

இதனால் பாதிப்பு அவர்களுக்கு மட்டுமல்ல; அவர்கள் குடும்பத்தினருக்கு, சக ஊழியர்களுக்கு மற்றும் நண்பர்களுக்கு...

கொரோனா வந்தவர்களனைவரும் மிகவும் பயந்து, உயிருக்கு போராடி, நல்ல சாப்பாடு சாப்பிட முடியாமல், மனஉளைச்சல் அதிகமாகி, உறக்கமில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வெளிவந்துள்ளனர்.

எனக்கு வராது, வந்தால் பார்க்கலாம் என்றிருப்பது மிகவும் தவறு.

நமது கோவையில் கொரோனா வந்தால் சேருவதற்கு மருத்துவமனைகளில் இடமில்லாமல் நோயாளிகள் மிகவும் திண்டாடுகிறார்கள்.

* ஆகவே தயவுசெய்து கொரோனாவை மிகவும் லேசாக எடுத்துக் கொள்ளவேண்டாம். தகுந்த பாதுகாப்பு எடுத்துக் கொள்ளவும்.



* கைகளை அடிக்கடி சோப்புப்போட்டு அல்லது சானிடைசர் போட்டு கழுவவேண்டும்
* காரணமில்லாமல் வீணாக வெளியில் செல்ல வேண்டாம்
* பேசும்பொழுது 6 அடி இடைவெளி இருவருக்கும் இடையில் கண்டிப்பாக இருக்கவேண்டும்.
* முகமூடி (face mask) கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும் - வாய், மூக்கு கண்டிப்பாக மூடியிருக்க வேண்டும்.
* அடிக்கடி வாய், முகம், முகமூடி(face mask) களை கைகளல் தொடக்கூடாது. தவறித் தொட்டால் உடனே கை கழுவவும்/ சானிடைசர் உபயோகிக்கவும்
* தாவாக்கொட்டைக்கு முகமூடி போடுவதால் எந்த உபயோகமும் இல்லை.

பல மருத்துவர்கள், செவிலியர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்! ஆகவே அனைவரும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

நாமனைவரும் எதிரிலிருப்பவருக்குக்கூட கொரோனா இருக்கக்கூடும் என்று நினைத்து பாதுகாப்பு எடுத்துக்கொள்வது நல்லது!



எனது கொரோனா அனுபவம்

– V.கோவிந்தராஜன் ,
பார்டர் தோட்டம், சென்னை.
(8 வீடு – கஸ்தூரி கொரகையர்)

நான் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று முழு நலத்துடன் திரும்பிவிட்டேன். மற்றவர்களுக்குப் பயன்படும் என்பதால் என் கொரோனா சிகிச்சை அனுபவத்தை குலமுரசில் பதிவிடுகிறேன்.

நான் ஜூன் 22 அன்று சிறிது காய்ச்சலாக உள்ளது என்று வீட்டிற்கு தினமும் வந்து கணக்கெடுக்கும் சுகாதார அலுவலரிடம் கூறினேன். உடனே அவர் ஒரு ஆட்டோவை வரவழைத்து புதுப்பேட்டை பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ஸ்வாப் டெஸ்ட் எடுத்தார்.

இருதினம் கழித்து போன் செய்தார். சார் உங்களுக்கு பாசிட்டிவ் என்று ரிசல்ட் வந்துள்ளது. எனவே தாங்கள் 15 நாட்களுக்கு உரிய உங்களது உடைமைகளை எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று அழைத்தார். நானும் சென்றேன். பிராட்வே பகுதியில் ஸ்டான்லி மருத்துவமனை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சுகாதார மையம். அங்கு ஆக்சிஜன் மீட்டர் டெஸ்ட், ஸ்மால் ஸ்கேனர் டெஸ்ட், பிளட் டெஸ்ட் எடுத்தனர்.

பிளட் டெஸ்ட் ரிப்போர்ட் மைல்ட் என்று வந்ததால் வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொள்ள பரிந்துரை செய்தார்கள். இரத்தப் பரிசோதனையில் கூடுதல் பாதிப்பு கண்டறியப்பட்டவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கிறார்கள். அவர்களுக்கு கூடுதலாக ஸ்கேன் எக்ஸ்ரே செய்யப்படுகிறது.

தனிமைப்படுத்திக் கொண்ட வீட்டை கிருமிநாசினி கொண்டு சுத்தப்படுத்தி வீட்டின் உள்ளேயும் வெளியேயும் பிளீச்சிங் பவுடர் தெளித்து கொரோனா ஹாட்ஸ்பாட் பேனர் கட்டி, சுவற்றில் அடையாள ஸ்டிக்கர் ஒட்டினர்.

குடும்ப உறுப்பினர்களும் பரிசோதிக்கப் பட்டனர். அன்றாட தேவைகளான மளிகை பொருட்கள், குடிநீர், காய்கறி, மருந்து போன்றவற்றை வாங்கி வந்து தர தன்னார்வலரை (வாலண்டியர்) நியமித்து விட்டனர்.

தினமும் மூன்று அல்லது நான்கு முறை மருத்துவர்கள் போன் மூலம் கண்காணித்து மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர்.

என்ன உணவு எடுத்துக்கொள்வதென்று நியூட்ரிசியன் டாக்டர் விளக்கினார். மன உறுதியை அதிகரிக்க மனநல மருத்துவரும் அழைத்துப் பேசி மனவலிமையைக் கூட்டினர்.

ஆரோக்கிய சேது ஆப்பை பதிவிறக்கம் செய்து கொள்ளச் சொன்னார்கள். Covid-19 பாசிட்டிவ் உள்ளவர்களுக்கு திரை சிவப்பாகவும், மற்றவர்களுக்கு பச்சை நிறமாகவும் காட்டுகிறது.

இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை ஆக்சிஜன் மீட்டர் மூலம் பரிசோதனை செய்துகொள்ளவும், அதில் ரீடிங் லெவல் 90க்கு கீழ் குறைந்தால் மருத்துவமனைக்கு வந்து அட்மிட் ஆகிவிடுமாறும் அறிவுறுத்தினர்.

ஆம்புலன்ஸ், எமர்ஜென்சி நம்பர், டாக்டர் எமர்ஜென்சி நம்பர் கொடுத்து, அவசர உதவி தேவைப்பட்டால் எந்த நேரமும் தொடர்பு கொண்டு உதவி கோரலாம் என்றனர்.

காவல் நிலையத்திலிருந்து அழைத்து நாம் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளோமா என்பதை போன் மூலம் விசாரித்தனர். நியூ டெல்லி சுகாதார அலுவலகத்திலிருந்தும் போன் செய்து ஆறுதலாகப் பேசினர்.

வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளும்போது தினமும் 3 வேளை சுடுதண்ணீரில் கல் உப்பு போட்டு வாய் கொப்பளிப்பது, மூன்று வேளை மூச்சுப் பயிற்சி, யோகா மற்றும் சிறிய அளவில் உடற்பயிற்சி செய்யச் சொன்னார்கள்.

மூன்று வேளை ஆவி பிடிக்க நோயாளியே அடுப்பை உபயோகிக்க முடியாது என்பதால் ஸ்டீம் இன்ஹேலர் மெஷின் மருந்துக் கடைகளில் கிடைக்கின்றது. விலை ரூ. 200/- தான். அதனை வாங்கி உபயோகப்படுத்தினேன்.

விட்டமின் டி சக்தியைப் பெற காலை 11 மணி அளவில் 15 நிமிடம் வெயிலில் நிற்கும்படியும், தினமும் கபசுரக் குடிநீர் மற்றும் தண்ணீரை சுடவைத்து பருகும்படி கூறினர். அன்றாடம் ஒரு முட்டையை மஞ்சள் கரு இல்லாமல் வேகவைத்து சாப்பிட வேண்டும் என்றும் கூறினர்.


மேற்கூறிய அனைத்தும் நம் முன்னோர்கள் நமக்கு பின்பற்றிய கிருமி விரட்டி பழக்கங்கள்தான். மேலும், அடிக்கடி சோப்பு போட்டு கைகளைக் கழுவும்படி கூறினர். எனது துணிகளை நானே தனியாக துவைத்துக் கொள்ளவேண்டும். துணி துவைக்கும்போதும் குளிக்கும் போதும் தண்ணீரில் டெட்டால் ஒரு மூடி ஊற்றவேண்டும்.

மூன்று வேளை சாப்பிடும்போது வாழை மட்டை தட்டு மற்றும் பிளாஸ்டிக் டம்ளர் உபயோகித்து அதை பிளாஸ்டிக் பையில் போட்டு தினமும் காலையில் குப்பை சேகரிக்கும் தூய்மைப் பணியாளர் வசம் கொடுத்துவிடவேண்டும்.

புத்தகம் படித்தல், நண்பர்கள், உறவினர்களிடம் கைபேசி மூலம் பேசுதல், பேப்பர் படித்தல், யுடியூப், வாட்ஸ்ஆப் பார்த்தல், ஆழ்ந்த உறக்கம் என்று பொழுதுகள் கழிந்துவிட்டது.

15 நாட்களுக்குப் பிறகு ஸ்வாப் டெஸ்ட் எடுத்தனர். அதிலும் பாஸிட்டிவ் என்று ரிசல்ட் வந்ததால் எனது வீட்டுத் தனிமைப்படுத்தலை மேலும் 15 நாட்கள் நீட்டித்தனர். மேற்சொன்ன அனைத்து நடைமுறைகளையும் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டியதாகியது.

இந்தக் காலம் முடிந்த பிறகு ஆரோக்கிய சேது ஆப்பில் திரை பச்சை வண்ணத்திற்கு மாறிவிட்டது. இதன்பிறகு எனக்கு சிகிச்சை விபரப் பட்டியலைக் (Treatment Summery) கொடுத்து கோவிட்-19 இல்லை (Covid-19 Tested Negative) என்று சான்றிதழ் கொடுத்தனர்.



கேம்ப்-ல் உள்ள நோயாளிகளுக்கும் இதேமுறைதான் பின்பற்றப்படுகிறது. சாப்பாடு, மருந்து மற்றும் அனைத்து வசதிகளும் உண்டு.

எனவே, பாஸிட்டிவ் என்றால் பயப்படவேண்டாம். முறையான சிகிச்சைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அரசு அனைத்து உதவிகளையும் செய்யும். இதே சிகிச்சையை தனியார் மருத்துவமனையில் செய்தால் 3 - 4 லட்சங்கள் செலவாகும்.

எனவே தயங்காமல் டெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள். நாட்களைக் கடத்தாதீர்கள். சளி, இருமல், காய்ச்சல், கைகால் வலி, அசதி போன்றவைகள் இதன் அறிகுறிகள். கொரோனாவின் வீரியம் 14 நாட்களுக்கு இருக்கும். அதற்குள் சிகிச்சையை முன்கூட்டியே மேற்கொள்ளத் தொடங்கினால் நுரையீரல் பாதிப்பு, இரத்தம் கட்டியாதல், மூச்சு இரைப்பு போன்ற பாதிப்புகள் ஏற்பட்டு அவசர சிகிச்சை ப் பிரிவுக்கு செல்லவேண்டிய சிக்கலான நிலைமைக்கு போகாமல் தவிர்க்கலாம்.

மாஸ்க் அணிந்து சமூக இடைவெளியைக் கடைபிடித்தால் கொரோனாவை நாம் தடுப்பது உறுதி. வரும்முன் காப்போம்! வந்துவிட்டால் தாமதமின்றி சிகிச்சை மேற்கொள்வோம். குறிப்பாக ரத்த அழுத்தம், நீரிழிவு, புகைப்பழக்கம் உள்ளவர்கள் மற்றும் முதியோர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அரசும் மருத்துவர்களும் கூறும் அறிவுரைகளைக் கேட்டு அதற்கேற்ப நடந்து கொள்ளவேண்டும்.

இந்த இக்கட்டான தருணத்தில் அயராது உழைக்கும் டாக்டர்கள் செவிலியர்கள் துப்புரவு பணியாளர்கள் சுகாதார ஊழியர்கள் மத்திய மாநில அரசுகள் இவை அனைத்திற்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

வருந்துகிறோம்



கோவை செட்டிவீதி (சலிவன்வீதி) ஸ்ரீ காமாட்சியம்மன் திருக்கோயில் முன்னாள் துணைத் தலைவர்
திரு. S.ஆறுமுகம் அவர்கள்
18.08.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்

இவரது மறைவுக்கு குலமுரசு சார்பில் ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தெரிந்து கொள்ள சில தகவல்கள்

- பரப்பளவில் மிகப் பெரிய நகரம் குயீன்ஸ்லாந்திலுள்ள மவுண்ட் இஸயூ. இதன் பரப்பளவு 41,978 சதுர கி.மீ.
- 3,684 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள தலைநகரம் லாசா. திபெத்தின் தலைநகரம் இது.
- கடல் மட்டத்திலிருந்து 16,732 அடி உயரத்தில் அமைந்துள்ள நகரம் வென்சுவான். 1955-ஆம் ஆண்டு திபெத்தில் இந்தகரம் உருவாக்கப்பட்டது.
- உலகில் செலவு அதிகமாகும் நகரம் டோக்கியோ.
- சைக்கிள்கள் அதிகம் உள்ள நகரம் - பெய்ஜிங் (சீனா).
- டாக்ஸிகள் அதிகம் உள்ள நகரம் மெக்ஸிகோ.
- கார்கள் அதிகம் உள்ள நகரம் நியூயார்க் (அமெரிக்கா).



வண்ணாரப்பேட்
ஸ்ரீ சாந்தி சாரிஸ்
டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
மொத்த விலைக்கடை
SRI SHANTHI SAREES
ஸ்ரீ சாந்தி சாரிஸ்
NO.1 SHOP
New Collections ! New Style ! New Fashion
SS No.1 Shop
New சாந்தி சாரிஸ்
வண்ணாரப்பேட்
New SHANTHI SAREES
SHANTHI SAREES
SUPER READYMADES
New சாந்தி சாரிஸ்
NO.1 SHOP
ஹோல்சேல் பிரைஸ்ல...
நாங்க மட்டும் சென்னையில...
சூப்பர் ரெடிமேட்ஸ்
No.59, M.C. ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 21.
: 044 - 25900181 | 25901181 | 25902183



உ

ராகு பகவான் மிதுனம் ராசியிலிருந்து ரிசபம் ராசிக்கும் ஸ்ரீ கேது பகவான் தனுசு ராசியிலிருந்து விருச்சிகம் ராசிக்கும் 1–9–2020 அன்று பெயர்ச்சியாகி 18 மாதங்கள் சஞ்சரிக்க உள்ளதை முன்னிட்டு பனிரெண்டு ராசிகளுக்குமான

ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்



மேசம்

உங்கள் ராசிக்கு ராகு பகவான் 2ஆம் இடத்திற்கும், கேது பகவான் 8ஆம் இடத்திற்கும் பெயர்ச்சியடைகின்றனர். ராஜ கிரகமான குரு பகவானும், சனி பகவானும் ஏற்கனவே சாதகமான நிலையில் உள்ளபோது ராகு, கேது பெயர்ச்சி நிகழ்வது நற்பலனே ஆகும். தொழில் ரீதியான உயர்வுகள் உண்டாகும். வேலை வாய்ப்பு, தொழில் புதிய முயற்சிகள் மேன்மை தரும். திருமணம், வீடு கட்ட முயற்சித்தல் போன்ற சுபகாரிய முயற்சிகள் சாதகமாக அமையும். பணியில் பதவி உயர்வு, உறவினர் வகையில் சுப நிகழ்வுகள் நிகழ்த்துதல், தெய்வாலயத் திருப்பணிகளில் ஈடுபடுதல், வாகனம் வாங்குதல், சொத்து வாங்குதல் போன்ற சுப நிகழ்வுகள் நிகழும் காலம் நடக்கிறது.

வாக்கு ஸ்தானத்தில் ராகு உள்ளதால் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். பௌர்ணமி நாளில் அம்மன் தரிசனம் செய்வது மிக நன்று.

கணித்தவர்: ஜோதிடர்
சீனு ஓ.பி. திருவேங்கடராஜ் M.A.,
பொள்ளாச்சி.
கைபேசி: 98426 15757
(8 வீடு - தவலையர்)



ரிசபம்

ராகு பகவான் 1ஆம் இடம் ரிசப ராசியில் சஞ்சரிக்கிறார். கேது 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வெளியூர் பயணங்கள் நன்மை தரும். 2021 ஜனவரிக்கு மேல் புதிய தொழில் முயற்சிகள் வேலை வாய்ப்புகள், திருமண முயற்சிகள், வீடு கட்டுதல், மேற்படிப்பு போன்ற சுப நிகழ்வுகள் நடைபெறும். வீண் அலைச்சல், மன சஞ்சலம் உண்டாகும் சூழல் உருவாகும். கணவன், மனைவி விவாதமாக மாறக்கூடாது. டிசம்பர் 2020 வரை கவனமாக செயல்படவேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் விநாயகருக்கு இருபுறமும் நாகர் வைத்துள்ள கோயிலில் வழிபடவேண்டும். துவாதசி திதியில் பெருமாள் தரிசனம் செய்து கருடாழ்வாரை மூன்று முறை வலம் வந்து வணங்க மன அமைதி கிடைக்கும்.



மிதுனம்

மிதுனம் ராசியிலிருந்து ராகு பகவான் 12ஆம் இடத்திற்கும், கேது 6ஆம் இடத்திற்கும் பெயர்ச்சியாவது நற்பலன்கள் தருகின்ற நிலை வாய்த்துள்ளது. உடல்நலத்தில் முன்னேற்றம், மனரீதியான குழப்பங்கள் நீங்குதல் ஆகிய நற்பலன்கள் உண்டாகும். தடைபட்ட சுப காரியங்கள் நிகழும். தொழில் நிலை உயர்வடையும், புதிய வீடு கட்டுதல், வாகனம்

வாங்குதல், உயர்கல்வி பயிலுதல், வெளிநாடு முயற்சி யாவும் சாதகமாய் அமையும். கூட்டுத் தொழில் மேன்மை தரும். உறவினர் கருத்து வேறுபாடு நீங்கும். மன வலிமை உண்டாகி எதனையும் சாதிக்கும் மனோபாவம் அமையும்.

பிரதோச வேளையில் சிவ தரிசனம் பௌர்ணமியில் பெருமாள் தரிசனம், சக்கரத்தாழ்வார் வழிபாடு நன்மை தரும்.

கடகம்



லாப ஸ்தானம் என்கின்ற பதினோராமிடத்தில் ராகுவும் பூர்வீக ஸ்தானமான ஐந்தாம் இடத்தில் கேதுவும் அமைந்திருக் கின்றனர். சாதகமான நிகழ்வுகள் நிகழும் காலம். தடைபட்ட காரியங்கள் நிவர்த்தி யாகும். புதிய தொழில் முயற்சிகள் ஏற்றம் தரும். உயர்கல்வி முயற்சி வெற்றி பெறும். திருமண காரிய முயற்சி இனிதே அமையும். உறவினர் வகையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் நிவர்த்தி யாகும். நீதிமன்ற வழக்குகள் சாதகமாக அமையும். 2021 ஜனவரி முதல் புதிய முயற்சிகள் உயர்வு தரும். வெளியூர் பயணம் ஆதாயம் உண்டாக்கும்.

திருச்செந்தூர் முருகப் பெருமான் தரிசனம் நற்பலன் தரும். பௌர்ணமியில் காமாட்சி அம்மன் தரிசனம் மிக்கபேருதவியாய் அமையும்.

சிம்மம்



தசம கேந்திரம் என்கின்ற பத்தாமிடத்தில் ராகுவும், நான்காமிடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர். தொழில் நல்ல முறையில் உயர்நிலை அடையும். பணியில் உயர்வு, உபதொழில், வெளிநாட்டுப் பணி முயற்சி சாதகமாக அமையும். கொடுக்கல், வாங்கல் பிரச்சனை சுமூகமாக முடியும். புதிய சொத்துக் கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். தர்ம காரியங்களில் ஈடுபடும் வாய்ப்பு கிடைக்கும். புண்ணிய நதிகளில் நீராடுதல், தெய்வாலய தரிசனங்கள் வாய்ப்பு நாடிவரும். 2021 ஜனவரிக்கு மேல் உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தொடக்கத்திலேயே நீக்க முயற்சிக்க வேண்டும்.

ஜென்ம நட்சத்திரத்தன்று சிவ தரிசனம் செய்யவேண்டும். பௌர்ணமி நாளில் ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் வழிபாடு நன்மை தரும்.

கன்னி



பாக்ய ஸ்தானம் என்கின்ற ஒன்ப தாம் இடத்தில் ராகுவும், மூன்றாம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றனர். குடும்பநிலை மேன்மையாகும். மாணவர்கள் கல்வியில் நல்ல தேர்ச்சி பெறுவர். புதிய தொழில் முயற்சி செய்வோர் மேன்மை அடைவர். வேலைவாய்ப்புக்கு முயய்சி செய்பவர்களுக்கு உரிய பலன் கிடைக்கும். புதிய வீடு, வாகன யோகம் நன்றாக அமையும். புதிய ஒப்பந்தங்கள் சாதகமாய் அமையும். வழக்குகள் சாதகமாக அமையும்.

சங்கடஹர சதுர்த்தியில் விநாயகப் பெருமான் தரிசனம் நன்மை தரும். வெள்ளிக்கிழமைகளில் காமாட்சி அம்மன், விசாலாட்சி, மீனாட்சி, கன்னிகா பரமேஸ்வரி தரிசனம் மிக்க நன்மை தரும்.

துலாம்



வாக்கு ஸ்தானமான 2ஆம் இடத்தில் கேதுவும் 8ஆம் இடத்தில் ராகுவும் சஞ்சரிக்கின் றனர். பெரியோர் அனுபவஸ்தர் களிடத்தில் கலந்தாலோசித்து எவ்வித முடிவும் தீர்மானிக்க வேண்டும். அவசர முடிவுகள் தவிர்ப்பது மிக நன்று. எவரிடமும் வாக்குவாதம் தவிர்க்க வேண்டும். நிதானித்து பேசுவதன் மூலம் உறவினர் பகை உண்டாகாமல் தவிர்க்கலாம். கூட்டுத் தொழில் புரிவோரிடம், பணிபுரிவோரிடம் மிகக் கவனமுடன் பேசவேண்டும். பூர்வீக சொத்துபத்திலே விவகாரங்களை ஒத்திவைத்தல் வேண்டும். விட்டுக்கொடுக்கும் மனோபாவத்தை உண்டாக்க வேண்டும். பிரச்சனைகளை தொடக்கத்திலேயே சரிசெய்து கொள்ளவேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் பெருமாள் கோயிலில் அமைந்துள்ள தாயார் சந்நிதியில் வெற்றிலை, பாக்கு, எலுமிச்சைப் பழ நெய் தீபம் வைத்து வழிபடுவது மிக நன்று. அமாவாசையில் விநாயகருக்கு பக்கமுள்ள சர்ப்ப வழிபாடு மிகுந்த நன்மை தரும்.

விருச்சிகம்



கேது பகவான் விருச்சிக ராசிக்கு பிரவேசம் செய்துள்ளார். சப்தம கேந்திர ஸ்தானமான ஏழாமிடத்தில் ராகு சஞ்சரிக்கிறார். வெளியூர் பயணம் அடிக்கடி நிகழும். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் உண்டாகும். புத்திரர் மேன்மை அடைவர். கூட்டுத் தொழில் ஏற்றம் தரும். ஏற்கனவே செய்யும் தொழில் புதிய மாற்றம் உண்டாகி லாபகரமாக அமையும். வேலைவாய்ப்பு முயற்சி நற்பலன் தரும்.

ஸ்ரீ ரங்கம் அரங்கநாதரை தரிசிப்பது மிக நன்று. பௌர்ணமியில் விநாயகருக்கு பக்கமுள்ள நாகர்களுக்கு பால், பழம், வெற்றிலை, பாக்கு வைத்து வழிபட வேண்டும்.

தனுசு



தனுசு ராசியிலிருந்து கேது விருச்சிகம் ராசிக்கும், ஏழாமிடமான மிதுனத்திலிருந்து கேது ஆறாமிடத்திற்கும் பெயர்ச்சியாகியுள்ளனர். ராகு, கேது பெயர்ச்சியில் அதிக நன்மை தனுசு ராசிக்கு வாய்த்துள்ளது. மறைந்த ராகு நிறைந்த பலன் தருவார் என்பதற்கேற்ப ஆறாமிட ராகு அதிக நற்பலன்கள் தருவார். முன்னேற்றப் பாதையில் பயணம் நிகழும். குடும்ப விரிசல்கள் சுமூகமாகும். இழந்த செல்வங்கள் மீண்டும் அமையும். நிறைவான நிம்மதியான மனநிலை அமையும். உடல்நலம் சுகம் கூடும்.

வியாழக்கிழமைகளில் சிவ தரிசனம், காலபைரவர் வழிபாடு, பௌர்ணமியில் பெருமாள் தரிசனம் நன்மை தரும்.

மகரம்



பூர்வ புண்ணிய ஸ்தானமான ஐந்தாமிடத்தில் ராகுவும், லாப ஸ்தானத்தில் கேதுவும் அமைந்துள்ளனர். ராகு, கேது பெயர்ச்சியால் எவ்வித பாதிப்பும் உண்டாகாது. ஏழரை நாட்டுச் சனியும் விரய குருவும் சில சிரமங்களை கொடுத்த போதிலும் கேது பகவான் நன்மையே செய்வார். தெய்வாலய தரிசனங்கள், ஞானிகள் ஆசி, புண்ணிய நதிகளில் நீராடுதல், வறியவர்களுக்கு உணவு தானம் செய்தல் மூலம் நற்பலன்கள் காணலாம்.

அமாவாசையில் சனி பகவானை ஒன்பது முறை வலம் வந்து வணங்குவதும், ஆஞ்சநேயரை தரிசிப்பதும் மன அமைதி தரும். திருச்செந்தூர் முருகன் தரிசனம் புத்திர மேன்மை தரும்.

கும்பம்



